# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 99/ந/2017

ஆணை எண். 206/2017

நாள் : 22/08/2017

திரு எஸ். வேல்கண்ணன்,
மறைமலை நகர் – 603 209. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை. – எதிர் மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர், எல்.ஐ.ஜி. 4/13, பேயாழ்வார் தெரு முகவரியில் வசிக்கும் திரு எஸ். வேல்கண்ணன் அவர்களது 02.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.05.2017 அன்று பெறப்பட்டு 99/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர், எல்.ஐ.ஜி. 4/13, பேயாழ்வார் தெரு முகவரியில் வசிக்கும் திரு எஸ். வேல்கண்ணன் என்பவர் ஓய்வுபெற்ற நகராட்சிப் பணியாளர் மற்றும் 81 வயது நிரம்பிய மூத்தகுடிமகன். முறையீட்டு மனுதாரர் மயிலாடுதுறை நகராட்சி கொரநாடு வார்டு எண்.4, பிளாக் எண்.28, நகர அளவை எண்.1309–ல் உள்ள 7679 சதுர அடிபரப்பிலான நிலத்தின் சொத்துவரி பெயர்மாற்றத்தினை தன்பெயரில் வழங்கக்கோரி, அவரது வழக்குரைஞர் மூலமாக 30.03.2016 நாளிட்ட கடிதத்தில் நகராட்சி ஆணையருக்கு முறையீடு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட கோரிக்கை குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினைத் தெரிவிக்குமாறு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரியுள்ளார். சுமார் 6 மாதங்கள் கழித்து, சொத்துவரி பெயர் மாற்றம் செய்து தரக்கோரும் சொத்து, முறையீட்டு மனுதாரருக்கு உரிமையானது என்றால் அதற்குரிய ஆவணங்களுடன் சொத்துவரி பெயர்மாற்றத்திற்கான விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்குமாறு மயிலாடுதுறை நகராட்சியின் பொது தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், 17.03.2017 நாளிட்ட மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் அறிவிப்பில் பெயர் மாற்றம் செய்வதற்கு தங்களின் பெயருக்கு பதிவு செய்யப்பட்ட பத்திர நகல் அல்லது உயில் நகல் இவற்றில் ஏதேனும் தங்கள் பெருக்கு பதிவு செய்யப்பட்டிருந்தால் அதன் நகலினை இணைத்து அனுப்பமாறு கோரப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் முறையீடு செய்தும், எந்தவித பலனும் கிடைக்காத நிலையில் இம்முறைமன்ற நடுவத்திடம் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரிடமும் 12.07.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன. தனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட வீட்டினை திரு சந்தானம் என்பவருக்கு வாடகைக்கு விட்டதாகவும், அவர் சட்டத்திற்குப் புறம்பாக இரண்டு நபர்களுக்கு விற்று விட்டதாக விசாரணையின்போது மனுதாரர் தெரிவித்தார். இது சம்பந்தமாக மயிலாடுதுறை முதன்மை மாவட்ட உரிமையியல் நடுவர் மன்றத்திலும், மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்திலும் வழக்குகள் தொடுத்து சொத்து சம்பந்தமாக தனக்குச் சாதகமாக தீர்ப்புகள் பெறப்பட்டன எனவும் தெரிவித்தார். மேலும், மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து, தனது சொத்தினை வாங்கிய நபர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கினைத் தொடுத்ததாகவும், அவ்வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ்க்காணும் தீர்ப்பு அடங்கிய நகலினையும் சமர்ப்பித்தார்:-

> " *In the result, the second appeal fails and same is accordingly dismissed. The decree and judgment of the lower, appellate court is hereby confirmed* "

எனவே, மேற்குறிப்பிட்ட தீர்ப்பின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட சொத்து முறையீட்டு மனுதாரருக்குப் பாத்தியப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

3. மயிலாடுதுறை நகராட்சி, வார்டு எண்.20, பெரிய மனவேலி தெரு, கதவு எண்.20/7A மற்றும் 22–ல் வீட்டின் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய மனுதாரரின் பெயரில் குறிப்பிட்டுள்ள இடத்திற்கான பத்திரம் அல்லது உயில் ஆவணங்கள் பதிவுத் துறையில் பதிவு செய்யப்பட்டு இருந்தால் மட்டுமே பெயர் மாற்றம் செய்ய இயலும் என நகராட்சி ஆணையர் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், இச்சொத்து சம்பந்தமாக நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பின் நகல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் உறுதி செய்துள்ளார். மனுதாரரின் வழக்குரைஞரிடமிருந்து 30.03.2016 நாளிட்ட கடிதத்தில் சொத்துவரி பெயர் மாற்றம் குறித்து தனக்கு கோரிக்கை வந்துள்ளதையும் குறிப்பிட்டார்.

4. சொத்துவரி பெயர் மாற்றம் செய்யக் கோரும் சொத்து சம்பந்தமாக, முறையீட்டு மனுதாரருக்கு உள்ள உரிமை குறித்து நீதிமன்ற தீர்ப்புகளின் நகல்களை முறையீட்டு மனுதாரர் நகராட்சியிடம் சமர்ப்பித்துள்ளார். சம்பந்தப்பட்ட சொத்து சம்பந்தமான நீதிமன்ற தீர்ப்புகள் இருந்தபோதிலும், பத்திரப் பதிவுத்துறையில் பதிவு செய்யப்பட்ட ஆவண நகல்களையும் வழங்கக்கோரி மனுதாரரை நகராட்சி ஆணையர் வலியுறுத்தியுள்ளார். ஒரு சொத்து உரிமை குறித்து மூன்று நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பினை கண்டுக்கொள்ளவேண்டுமா அல்லது பத்திரப்பதிவு ஆவணங்களின் அடிப்படையிலேயே செயல்படவேண்டுமா எனப் பகுத்துணர்ந்து நடவடிக்கை எடுக்க நகராட்சி ஆணையர் தவறியுள்ளார். மேலும், மயிலாடுதுறை நகராட்சியின் 7584/2016/அ3 எண்ணிட்ட கோப்பு சம்பந்தப்பட்ட குறிப்புக் கோப்பினை ஆய்வு செய்ததில் கீழ்நிலை அலுவலர்கள் பதிவு செய்த குறிப்புகளின் அடிப்படையிலேயே நகராட்சி ஆணையர் செயல்பட்டுள்ளார். மேலும், மனுதாரருக்கு வழங்கிய 17.03.2017 நாளிட்ட அறிவிப்பு மற்றும் இம்முறைமன்ற நடுவத்திற்கு முகவரியிட்ட கடிதங்களில் சொத்து அமைந்துள்ள வார்டு எண் மற்றும் கதவு எண்கள் குறித்து தவறாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையர் எந்நிலையிலும் தனது சிந்தையை செலுத்தியதாகத் தெரியவில்லை. மேலும் சட்டபூர்வமாகவும், நடுநிலையாகவும் செயர்பட்டதாகத் தெரியவில்லை.

5. எண்பத்தொன்று அகவையினைக் கடந்த முறையீட்டு மனுதாரர், ஓய்வுபெற்ற நகராட்சிப் பணியாளர். தனது முறையீடு குறித்து நகராட்சி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத நிலையில் "பதில் கிடைப்பதற்குள் தான் உயிரோடு இருப்பேனா" என மனவிரக்தியுடன் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார். "Most of the problems are not solved because of the wishy washy attitude of certain indifferent Government Servants" என்ற கருத்து பொதுமக்களிடையே பொதுவாக நிலவுகிறது. இந்நேர்வில், நகராட்சி ஆணையரின் "wishy washy attitude" நிர்வாகச் சீர்கேட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. எனவே, மூத்த அகவையினரான முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையினை நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலிக்காமல், தேவையற்ற காரணங்களைத் தெரிவித்து அலைச்சலுக்கு உட்படுத்திய மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் மீது துறைரீதியான நடவடிக்கையினை மேற்கொள்ளலாமா என பரிசீலிக்கும்படி நகராட்சி நிர்வாக ஆணையரை இம்முறைமன்ற நடுவம் கேட்டுக்கொள்கிறது. மேலும், நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் மனுதாரருக்குச் சொந்தமான சொத்திற்கு வேறு இருவர் பெயரில் சொத்துவரிகள் விதிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளன. மூன்று நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகளின் அடிப்படையில் மேற்படி நபர்களின் பெயர்களில் உள்ள சொத்துவரியினை நீக்கம் செய்து முறையீட்டு மனுதாரர் பெயரில் தாக்கல் செய்யவும் மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இம்முறைமன்ற நடுவ ஆணையினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கையினை 20 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படியும் ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 22–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

23.8.17

23/8/17

பெறுநர்

1. **நகராட்சி ஆணையாளர்,**
   **மயிலாடுதுறை நகராட்சி,**
   **மயிலாடுதுறை.**

2. **திரு எஸ். வேல்கண்ணன்,**
   **எல்.ஐ.ஜி. 4/13, பேயாழ்வார் தெரு, என்.எச்–1,**
   **மறைமலைநகர் – 603 209.**

3. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
   **சேப்பாக்கம், சென்னை – 600 005.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**